IV.C.32

உ

சிவமயம்

குருசரணமயிலை 214

# மாதரொழுக்க விலக்கணம்.

கருவலிசபேணி கிலேர்வாருகுலா
ப்ப ஸ்கூலில் பிரதமஉபாத்தியாயராகிய
ம-௱-௱-ஸ்ரீ, C. புருஷோத்தம முதலியார்
அவர்களுதவியால்
மதராஸ் டிப்டி கலெக்டர் ஆபீசிலிருக்கும்
பெரும்பாகசம,
**அய்யாக்கண்ணுமுதலியார்**
அவர்களால்,
இயற்றப்பட்டு
சென்னை சருவகலாசாலை
தமிழ்த்தலைமைப்புலமைநடாத்திய
ம-௱-௱-ஸ்ரீ,
**கோ. இராஜகோபாலபிள்ளை**
அவர்களால் பார்வையிடப்பட்டு
மதராஸ் டிப்டி கலெக்டர் ஆபீசிலிருக்கும்
**பலிசெட்டி. வெங்கடபதி நாயுடு**
அவர்களால்பதிப்பிக்கப்பட்டது

PRINTED AT THE HINDU PRESS, ROYAPETTA.
1885.
*Copy Right.*

இதன்விலை அணா 4.

MAHAMAHOPADHYAYA
DR U.V. SWAMINATHA IYER LIBRARY
TIRUVANMIYUR MADRAS

Waltair

W. Walker Esquire
Engineer-in-Chief
East Coast Railway
Waltair.
Vizagapatam

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# மாதரொழுக்க விலக்கணம்.

—— o ——

மாதரொழுக்க விலக்கணம் என்பது ஸ்ரீகள் இணையில்லா மணிப்பணிகளினும் கனப்பணிகளாக மேற்கொண்டொழுக வேண்டிய நடைகளின்னவை யென்றும் அப்பணிகளிற் படியு மாசுபோல, நன்னடை சற்றுந் தவறுஞ் சமயம்பார்த்து அதன்பின் நடப்பதும், விலக்கவேண்டுவதுமாகிய நடைகளின்னவை யென்றும் உணர்த்தும் நூலாம்.

---

1. மாதர்களுக்கு மூன்றுவிதக் காவலுண்டு; பெற்று வளர்த்துக்காத்தல் தாய் தந்தையர் கடமை; மணம் புரிந்தபின் காத்தல் நாயகர் கடமை, அப்பால் புத்திரர் கடமையாம்.

2. அரசர் தமக்குரிய நால்வகை அங்கங்களைப் பாதுகாத்து விருத்தி செய்வதுபோல் கற்புடைய மாதர்களும் பெண்மைக்குரிய நாணம், மடம், அச்சம், பயிர்ப்பு, என்னும் நாற்குணங்களைப் பாதுகாத்துக்கொள்ள வேண்டும்.

பெண்கள் தம் பதிவிர்தா நிலையைக் காப்பாற்றி, உண்டி முதலியவற்றால் புருஷனை உபசரித்து, நல்லபுகழைப்பெற்று உலகமகிழ ஒழுகுதல் வேண்டும்; இவ்வகை மங்கையே

**மகாமகோபாத்யாய, டாக்டர்**

**உ. வே. சாமிநாதையர்**

தந்தை தாயர்களுக்கும் புருடருக்கும் பெருஞ் செல்வமெனப்படுவர்.

தெய்வம், தீர்த்தம், நோன்பு, திருவிழா, இவையாவும் தத்தம் புருஷரே என்று கருதி, அவர் மனங்களிக்க நடந்து திரிகரண சுத்தியாய்ப்பத்தி செலுத்தவேண்டும்;

"தெய்வந்தொழாஅள் கொழுநற் றொழுதெழுவாள், பெய்யெனப் பெய்யுமழை."

எனத்திருவள்ளுவர் கூறலுங் காண்க.

5. கன்னிகைப்பருவத்தில் மாதாபிதாக்களது ஆணைக்கும் மணஞ்செய்தபின் கொழுநன், மாமி, மாமன் இவர்களது ஆணைக்கும், உள்ளடங்கி அவர்களிட்ட கட்டளையைச் சிரமேற்கொண்டு ஒழுகுதல்வேண்டும்.

6. பிராரப்தத்தால் வாய்த்தபர்த்தா பாண்டு முதலிய நோயால் மிக்க வருத்தத்தை யடைந்தவராயினும், நற்குண நற்செய்கை யில்லாதவராயினும், அழகில்லாதவராயினும், வயோதிகராயினும், கல்விவாசனை யில்லாதவராயினும், வறியவராயினும்,

"குலமகட்கழகுதன் கொழுநனைப்பேணுதல்"

என்றபடி அவருக்குக் கால் கழுவல், கபம், சீ, மூத்திர புரீட முதலியவற்றின் பெருக்கினைப் பல காலுங்கழுவல் முதலியவை செய்து உபசரித்துப் பொறுமை யுடையவளாய்ச் சிறிதும்

மனங்கோணுது, நன்கு உபசரித்தலேயே மேற்கொண்டொழுகுதல் வேண்டும்.

7. புருஷருக்கு விருப்பமில்லாத காரியத்தைச் செய்பவள், அவர் விரும்பியதைச் செய்யாதொழிபவள், மதுபானஞ் செய்பவள், தன்பயனைத் தேடிக்கொள்ளவதிலேயே கருத்துடையவள், அந்நியரை வருத்தும் இயற்கைக் குணமுடையவள், பொறாமை யுடையவள், பொருளையழிப்பவள், உலோப குணமுடையவள், கற்பில்லாதவள் ஆகிய இவர்களுறவை விட்டொழிக்கவேண்டும்.

8. பதிவாக்கியங்கடவாதவள், செய்நன்றி மறவாதவள், பணிவிடைகளில் மிகுவல்லவள், தருமகாரியங்கட்குத துணையாயிருப்பவள், இன்மொழி கூறுபவள், ஆகிய இவர்களே புருடனுக்குப் பெருஞ்செல்வ மெனப்படுவர்.

9. கன்னிகையாயிருககும் பருவத்தில் தம இசசையாய் அடிககடி யணடை யயல வீட்டிற்குச செல்லலாகாது; மணந்த பின்னா அயலிடங்கட்குப் போகநேரிடில் மணவாளனது அநுமதியால் ஒரு சிறிய குழந்தையையாவது வழித்துணையாகக கூட்டிககொண்டு செலலவேண்டும; தனிவழியே செல்லலாகாது.

10. மாதா பிதாக்களிடத்தில் பாராட்டும் அன்பைக்காட்டிலும், பர்த்தாவினிடத்தில் அதிக அன்புடையவளாய் இருத்தல் வேண்டும். மாதா பிதாக்களை விட்டு நீங்கினாலும், புருடனைமாத்திரம் எக்காலத்திலும் விட்டு நீங்கியிருக்கலாகாது.

11. நாயகர் இருக்கத்[illegible]லிருக்குங் காலத்தில் ஆபரணங்களை அணிந்து, அவர் கண்டு உள்ள மகிழும்படி அலங்காரஞ் செய்துகொள்ள வேண்டும்; நாயகரில்லாத காலத்தில் அலங்கரித்துக்கொண்டு தெருவில் அன்னியர் பார்க்கும்படி தலைக்கடையிலே நிற்றல், பலகணிவழியாய் நோக்குதல், அயலாரோடு வீண் வார்த்தையாடல், இவை யெல்லாம் கெட்ட நடக்கையின் குறிகளாகுமாதலால் அவைகளை ஒழிக்க முயலவேண்டும்.

12. புருஷர் பாபத்தொழில் செய்யும்படி தன்னை யேவினால், உத்தமபெண் அது தருமமல்ல தவிர்க்கவென்று வேண்டிக்கொள்ள வேண்டும்; அவர் அவ்வேண்டுகோளுக்கிசையாவிட்டால் யாதொருகளங்கமுமின்றி அவரானைப்படி ஒழுகுதல் வேண்டும்.

13. அன்னிய புருஷரைச் சகோதரராகவும், கொழுநனைத் தெய்வமாகவும், தன்னோடொத்த மாதர்களைச் சகோதரிகளாகவும் பாவிக்கவேண்டும்.

14. அதிக வருத்தத்தோடுங் கூடி வந்த அதிதி சமீபத்திலிருக்கும் போது உண்டி முதலிய விஷயங்களில் அவனை நீக்கி பார அப்பால் வேறொருவனுக்குப் படைக்கின்றன ரோ அவர்கள் எரிவாய் நரகத்தினைக்கண் உறுவார்கள்.

15. தீபத்தின் ஜ்வாலையைக் கரத்தினாலாவ து, வஸ்திரத்தினாலாவது வீசுதலும், தீபத் தை வாயினால் ஊதியவித்தலும், கையினாலே விசிறலுமாகாவாம்.

16. நாயகருடைய கோபம், சந்தோஷ ம் இவற்றின் குறிப்பால் அறிந்து நடந்து கொள்ளவேண்டும்; ஒருபோது கணவர் கோ பித்தால் தானுங் கோபியாமல்

"தன்னைத்தான் காக்கிற் சினங்காக்க
காவாக்கால் தன்னையே கொல்லுஞ் சினம்"

என்றபடி அதைப் பொறுத்து இதம்பேசித் தணித்தல் வேண்டும்; அநீதியாயப் புருஷர் வைதாலும், அடித்தாலும், அதனைப் பொறுக் தாக்கொண்டு எதிர்மொழி பகராமல், அடங்கி யிருத்தல் வேண்டும்; "பெண்டிர்க் கழகெதிர் பேசாதிருத்தல்" என்னும் நறுந்தொகையாலு முணர்க.

17. ஜபம், தபம், கங்கையாத்திரை, நோன்பு, முதலியவற்றை அனுஷ்டிப்பதினா லுண்டாகும் புண்ணியத்தினும் தலைவருக்கு

ப்புரியும் பக்தியொன்றினாலுளதாகும் புண்ணியமே அதிகமென்று மேலோர் கூறியிருக்கின்றனர்.

18. புருடருக்கு அன்னமிடும்போது தாயைப்போலவும், சயனிக்கும்போது பிரிய நாயகியைப்போலவும், ஆலோசனை செய்யும் போது அமைச்சனைப்போலவும், பணிவிடை செய்யும்போது ஊழியக்காரிபோலவுமிருத்தல் வேண்டும்.

19. பெண்கள், தங்கள் தாய்தந்தையர்கள் ஆண்டவனுடைய குணங்களையும், பாவ புண்ணியத்தின் கூறுபாடுகளையும், ஏழைகளுக்குப புரியும உபசாரங்களையும், கொழுநனிடத்து நடந்து கொள்ளவேண்டிய மார்க்கங்களையும், பெரியோர்கட்குத் தொண்டுசெய்யும் விதங்களையும நன்கு கற்பிக்குங்காலையில், அதிகக் கருத்தோடு கேட்டு நெஞ்சில் பதியவைக்க வேண்டும்.

20. தன் மனையின்கண் வந்த அதிதிகளின் கோத்திரம், ஊர், பெயர், தொழில்முதலியவைகளை வினவலாகாது; அப்படி வினவி அந்நமிட்டால் அவ் வந்நமிடுவதாலுண்டாம் பயன் பெறுவதில்லை.

21. சோறு, கறிவகை முதலிய உண்டிகளைப் பரிமாறும்போது, கையினால் தீண்

டாமல் கரண்டிமுதலிய கருவியால் பரி மாறல் வேண்டும்; அப்படிப் பரிமாறும்போ து, கணவருக்கும் மற்றோருக்கும் யாதொரு வஞ்சனையுமின்றிச் சமமாய்ப் படைத்தல் வேண்டும்.

22. சமையல் செய்யும் இடங்களில் மூக்குநீர் சிந்துதலும், அபானவாயு விடுதலு ம, வெற்றிலைப் பாக்கு மெல்லுதலும், கொட் டாவி விடுதலும், மயிர் சிக்கறுத்தலுமாகா வாம்.

23. குலப்பெண்கள் நடக்கும்போது பூங்கொடி ஒடிந்து விழுவதுபோல், ஒய்யார மாய் நடக்காமலும், அன்னநடையைப்போல பூமியைப் பார்த்தவண்ணமாய் நடக்கவேண்டு மே அல்லது, கைவீசி விசையாய் நடக்கலா காது.

24. புகுந்த வீட்டில் தனக்கு நேரிட் டிருக்கும் கஷ்ட நிஷ்டூரங்களைப் பிறந்தவீட் டிற்குத்தெரிவிக்கலாகாது; தன்தலைவருக்குத் துன்பம் நேரிடின் அது தனக்கும் நேர்ந்த தாக அதற்குடன் படவேண்டும்.

25. பெரியோர்கள்தங்கள்வீட்டிற்குவந் தகாலத்து, அவர்களை அன்போடு ஆசனத் திருத்தி,அவர்களுடன் முகமலர்ச்சியாய் இனி யகுரலோடு மிருதுவாகப் பேசவேண்டும். இடிஇடித்தாற்போல் உரத்துப்பேசலாகாது.

26. வீட்டிலுள்ள உடைமைகளில்கருத்துள்ளவளாயும், கணவருக்குவேண்டியபணிவிடைகளில் சிரத்தையுள்ளவளாயும, உத்தமஸ்திரீகளிடத்தில் நேசமுள்ளவளாயும, நல்லோர்களிடத்தில் விசுவாச முள்ளவளாயும், ஏழைகளிடத்தில் கருணை யுள்ளவளாயுமிருத்தல் வேண்டும்.

27. தன்குலத்தை உயர்ந்தநிலைமைக்குக் கொண்டுவரவேண்டுமென்னும் எண்ணமிருப்பின் தன்னைப்பார்க்கினும் சிறந்தவராயுள்ளவரோடு சம்பந்தஞ் செய்து வரவேண்டும்.

28. எவ்விடத்தில் உட்கார்ந் திருந்தாலும், புருடன், மாமன், மாமி முதலிய பெரியோர்களைக் கண்டால் உடனே எழுந்திருத்தலவேண்டும்.

29. புருஷர் சம்பாதித்தாலும், சம்பாதிக்காவிட்டாலும், கொடுத்தாலும், கொடாவிட்டாலும், அவரை அசட்டைசெய்யலாகாது. நாயகர் வெளியே போயிருந்து வீட்டிற்கு வரும்போது முகமலர்ச்சியோடு கால் கழுவநீர்கொடுத்துபசரிக்க வேண்டும்.

30. கணவரது பொருள் வரவிற்கேற்றபடி அளவறிந்து செலவழித்தல்வேண்டும் வீட்டுப்பண்டங்களை விற்றலும் தாய்வீட்டிற்

குக்கொடுத்தனுப்புதலும உத்தமிக் கடாதன வாம்.

31. பெண்கள் இளமைப்பருவத்தில் வறுமையால் அயலார் வீட்டுப்பணிவிடைகளை சசெயயும போதும, விளையாடுங்காலத்தில விளையாடும் போதும் இருமுதுகு ரவாகளுக குக் குறைவுவாராதபடி நடந்துகொள்ளவேண டும்.

32. கணவர், அன்னியபுருடரிடத்திலா வது, ஸ்திரீகளிடத்திலாவது பிறர் கேளாத படி மெல்லவார்த்தையாடிக் கொண்டிருந்தா ல அதையென்னவென்று விசாரித்தலும், காது கொடுத்துக் கேட்டலும், அடிக்கடி அப்பக கஞ்செல்லுதலும், கணவனைகூப்பிட லுமாகா வாம்.

33. புருஷர் வெளியிலெழுந்துபோகத் தொடங்கும்போது அவரைப்பின்னேநின்று அழைத்தலும், எவ்விடம் போகிறீரொன்று கேட்டலு மாகாவாம்.

34. கணவருடைய உடம்பின் பாதுகாப் பிற்கும், தருமகாரியத்திற்கும், நித்திய கருமத் திறகும், வேண்டியவைகளை மனைவியேசெயய வேண்டும்.

35. தன்னினும் ஏழையாயிருப்பவாக ளுக்குத்தன்னாலியன்ற உபகாரஞ்செய்தல்வே ண்டும், தன்னைக்காட்டிலும் பாக்கியவதிகளைக கண்டுபெருமூச்சுவிடலாகாது.

36. கொழுநர் வறியவராயிருப்பின் அது நாம்முன்செய்ததவப்பயனெனக்கருதவேண்டு மேயல்லது, அவரைஎந்நேரமும்மனம் புண்ணு
கும்படி வருத்தபபடுத்தலாகாது; தன்னின்வ றியவர்களைக் கண்டு தன் நிலையைப்பற்றித்தான் திருப்தியடைதல் வேண்டும்.

37. கணவர்மதுபாந முதலியதுர்கிர்த்த யம்செய்கின்றவராயின், தன்னாலியன்றவளவு இதம் பேசி நல்லவழியில்கொண்டு வர முயல வேண்டும், அவரதுகுற்றங்களைப்பிறருக்கு எடு த்துரைக்க லாகாது. “ தூற்றும் பெண்டிர் கூற் றெனத்தகும்” என்று ஒளவையார் கூறலு முணர்க.

38. அயலார் தரித்திருக்கும்ஆபரணங் களைப்போலவே, தனக்குக்கடன்பட்டாவது செய்துதரும்படிகொழுநரைத்துன்புறுத்தலா காது; அப்படிச்செய்தும் தராவிடின் அவரை அவமதிக்க லாகாது; “ மங்கலமென்ப மனை மாட்சி மற்றதன் நன்கலனன் மக்கட்பேறு” என்ற திருக்குறளின்படி, உத்தம குலத்துப் பெண் ணுக்கு நல்லபுதல்வரைப்பெறுதலே போது மானநல்ல வாபரணமாம்.

39. நாயகருக்குப் பரஸ்திரீயின் சக வாசமாயிருக்கிறதென்று அவரை உபசரிக்கா மலும், அவரோடுரையாடாமலும், இருத்த லாகாது, நாளுக்கு நாள் அவர் மனமிரங்கும்

படி முகமலர்ச்சிகாட்டி இன்சொற்களால தன்வயப்படுத்தல் வேண்டும்.

40. குருடர், செவிடர், விருத்தர் நோயாளர், நாதனற்றவர், நொண்டிகள், ஊமைகள், முதலாயினோர், இல்லையென்று வந்தால் இல்லை என்று சொல்லாமலும் கரோமாய் அவர்களைக் கோபியாமலும், தன்னாலியன்ற மட்டும் பிக்ஷை கொடுத்து முகமலர்ச்சியோடு அவர்களை அனுப்பவேண்டும்.

41. தன்பிள்ளையிடத்தில் பாராட்டும் விசுவாசத்தைக்காட்டிலும், சக்களத்திபிள்ளைகள், மைத்துனன் பிள்ளைகளாகிய இவர்கள் மேல் மனப்பூர்த்தியாய் அதிக விசுவாசமுடையவளா யிருத்தல் வேண்டும்.

42. அந்நியரிடத்தில் பெற்ற தானத்தைக் கெட்டவழியில் செலவழித்தலும், சற பாத்திரத்தில் மூன்றிலொருபாகமாவது செலவழிக்காது பொருளிருப்புச் செய்து வைத்துக் கொண்டிருத்தலுமாகாவாம்.

43. மாமன், மாமிமுதலானவர்கள் பேரிலிருக்கும் கோபத்தால பிறரைச்சார்த்தி அடிப்பதும் வைவதுமாகாவாம், "கொண்டவன் பலமிருந்தாற் குப்பையேறிச் சண்டை செய்யலாம்" என்றபடி புருஷருடைய தயை நமக்குப பூரணமா யிருக்கிறதென்று வீட்டிலுள்ளவர்களையும் மற்றவர்களையும் எந்நேரமும் அச்சமுறுத்திவாதுக்கழைககலாகாது.

மகாமகோபாத்யாய, டாக்டர்
உ. வே. சாமிநாதையர் நூல் நிலையம்

44. கணவர் புசிப்புக்கெதிர்பார்த்திருந்து, வந்த பிறகு அவர்நாவிற் கின்பமாகிய நல்லுணவுகளா லுண்பித்து, அருகே இருந்து பரிமாற வேண்டும்; அவர்புசித்தபின் அப்பரிகலசேஷத்தை அமிர்தம்போலப் புசிக்கவேண்டும்.

45. கருப்பிணி, விருத்தர்கள், பாலகர், மாமன், மாமிமுதலிய இவர்கட்குச சுத்தமாகிய உணவுகளை முன்னுண பித்துப்பின்பு தாம்புசிக்கவேண்டும்.

46. உதயகாலத்தில் கணவருக்கு நித்திரைபங்கம் வாராமல் சர்வஜாக்கிரதையாய் முன்னெழுந்து கடவுளை வணங்கித் தந்தசுத்திச்செய்து நெற்றியில் திலகம்அணிந்து கணவரைத் தன் முகம்பார்க்கும்படி செய்யவேண்டும்; பிறகு மாமன், மாமி, முதலானவர்களை வந்தித்துவீட்டின் பணிவிடைகள் யாவுந்தவறாமல் புரியவேண்டும்.

47. புருஷர் சயனிக்குமிடத்தை நன்றாயசுத்தஞ்செய்து அவருக்குப் புரியவேண்டியபணிவிடைகள யாவும் முடித்து அவர் உறங்கினபின் தான்உறஙகவேண்டும்.

48. தாய்வீடு அருகிலிருக்கிறதென்று அடிக்கடி அவ்விடத்தில் செல்லுதலும், தாயவீட்டார் அதிக சம்பத்திலிருக்கிறார்களென்று

புருடனை அசட்டைபண்ணுதலு மாகாவாம்,
நாடவீடோடிய பெண்ணும் பேயோடிய கூத்துரு
மம்”

49. “ தற்காத்துத்தற் கொண்டாற்பேணித் தகைசான்ற சொற்காத்துச் சோர்விலாள் பெண் ” என்ற திருக்குறளின்படி முன்பு தன்னைக் கற்பினின்றுங் காப்பாற்றி, பின்பு தன்னை மணந்துகொண்ட நாயகனை யுண்டி முதலியவற்றாற்காப்பாற்றி, தமமிருவரிடத்தும நனமை மிகுந்த புகழை நீங்காமற்காத்து, நலலொழுககத்தில் மறதியிலலாதவளே பெண்ணென்று உரைத்திருப்பதைக காண்க.

50. நற்குணநற்செய்கையில்லாதவரோடுசினேகித்தல் அவர்களுககு நேரிடும சஙகடங்களையாவும அவர்களோடு சினேகித்தவருககும வந்து சம்பவித்து ஓர்வேளை பிராணனையும இழக்குமபடி செய்யும “ ஆய்ந்தாய்ந்து கொள்ளாதான் கேண்மை கடைமுறை தானசாந்துயாந்தரும” எனபதுமது.

51. விசேஷ பூஷணஙகள அணிந்திருந்த போதிலும், நெற்றியில திலகமும, மெய்யில மஞசளும் அணியாமலிருக்கலாகாது.

52. மனைவியுங் கணவனும மனமொத்துத தருமஞ்செய்ய வேண்டும. புருஷனை கடவுளு

டைய மகிமைகளைப பற்றி யெடுத்துரைககுமபடி வேண்டிக கொள்ள வேண்டும்; சகலவிதஆபர ணங்களைத் துறககுமபடி இடா நோந்தாலும் மாங்கலயத்தை மாததிரந்துறககலாகாது.

53. ஒருநாள் ஒருவருக்குஆன்பாய்பபடைந்த அன்னத்தை அடிககடி யேசிககாட்டுவதும, பலபேரிருக்கையில அவாகடகுக கொடாமல நல லுணவுகளைத்தாமொருத்தியே புசிபபது மாகா வாம, "விருந்து புறத்ததாத் தானுண்டல் சாவாமருந் தெனினுமவேண்டற பாறறன்று" என்று கூறினா மேலோா.

54. விருந்தினனை தூரததிலே கண்டவிட நது முகமலாசசி காட்டலும, சமீபதது வநதவிட தது இனசொற சொலலுதலும, உணணஉடன பட்டபோது உபசாரஞ் செயதலும அவசியமாம "மோப்பககுழையு மனிச்சம் முகநதிரிந்து, நோக்கக்கு ழையும் விருந்து" என்பதுமது

55. நடககும்போதும, நிற்கும்போதும உணணுமபோதும, மறறைவழிகளாலும் பிறவு யிாகளுககுத் துன்பங்கள் மறப்பினாலாவது வா ராமல் முன்னரே அறிநது காக்கவேணடும்.

56. தனனாயகனுககுக் காலதேச வாத்த மானததினால ஆபத்து நேரிட்டால,தனனுடைய ஆபரணம, ஆடை முதலியவைகளை விற்றுவது

அவவாபத்தை யொழிக்க முயல வேண்டும்.

57. புருடனுக்குத் தன் மாதா பிதாக்களிடத்தில் கோபம பிறப்பின் அதையின் சொற்களால் தணித்தல் வேண்டும. அபபடி நடபபவளுடைய மாட்சிமை யாவராலும புகழப்படும்.

58. கணவனுக்குப புரியும உபசாரத்தைபபோலவே, மாமன் மாமிகளுக்குஞ் செயதலவேண்டும. அவாகள் ஒருபோது கடுஞ் சொல சொலலினும, அதைக் கொழுநனிடத்துஒன்றையிரணடாகப புனைத்துக் கணவனுக்குக் கோபம பிறககும்படி செய்யலாகாது. அவர்களை இருமுது குரவாகளாகப பாவித்துக் குடும்ப பாரத்தைததானே ஏற்றுக் கொண்டு, பணிவிடைகளில் குறைவின்றி நிறைவேற்ற வேண்டும். "வலலடி வழக்கைச் சொல்லடி மாமி" என்று மாமி முதலியோரை வாதுக் கிழுக்கலாகாது.

59. தன் பணிவிடைக்காரி தனக்கு மனங்களிப படையுமபடி நடந்த போதிலும அவளவிஷயத்தில் கண்ணோக்க முடைய வளாயிருததல வேண்டும.

60. அழுக்கடைந்தஆடையைத்தோயததுடுககாமலும், வீட்டைச் சுத்தப படுத்தாமலும், சமைப பதற்கு முன் ஸ்நானம் செய்யாமலும், புசிபபதற்குமுன் முகம், கரம், கால்களைக் கழுவாம

லு மிருக்க லாகாது. "நன்றிக்கு வித்தாகு நல்லொழுக்கந், தீயொழுக்க மென்று மிடும்பை தரும்" எனபது தவறன்றே.

61. மாமன், மாமி, மைத்துனா முதலாயினோ பசியினல் வருந்த தன்வயிற்றைப் பெரிதாகபபாவித்துச் செவ்வையாய் வயிறு நிரமபவுண்டுகளிக்கும் லோபிகள் வறுமையால பலவித ததுன்பஙகட்காளாகி ஊரொங்குந் திரிந்து இரந்து உழன்றுமறுமையில் நரகமெய்துவார்கள்.

62. பாத்திர மறிந்துபிச்சையிடு என்றபடி குற்ற மற்ற நல்ல வித்தா யிருந்த போதிலும, உவா நிலத்தின் கண் விதைத்தால் அது எப்படிப் பயிராகமாட்டாதோ அதுபோல் குற்றம் பொருந்திய அசத் பாத்திர மா யுள்ளோர்க்குக கொடுத்த தானமும் பலத்தினைக் கொடுக்க மாட்டாது.

63. புருடன் அடித்தால் தானும் அடிக்கமுயலுதலும், வைதால் தானும் வைதலுமாகாவாம. அவவாறு ஒழுகுபவள் பலவிதத்துன்பஙகட்காளாகி வருந்திக் கொண் டிருபபாள்.

64. பொன்னைப்புடமிடுந்தோறும் பொன் பிரகாசிப்பதுபோல் இலலறத்தில் பயிற்சி மேவிடுந்தோறும் நன்னடக்கைகளில் சற்றுந்தவறின்றி அருந்ததி இவளேஎன்று யாவரும கொண்டாடும்படிநடந்து கொள்ள வேண்டும.

மகாமகோபாத்யாய, டாக்டர்
வே. சாமிநாதையர் நூல் நிலையம்

65. தன்னோடொத்தமாதர்களோடுமொருமிவாழும்போது ஒருகால்அவர்கள் நன்னெறியினின்று சற்றேதவறுஞ்சமயத்து அப்போதைக்கப்போதே கண்டித்து நல்லறிவு சுட்டிக்கொளுத்திதிருப்பவேண்டும். "நகுதற் பொருட்டன்று நட்டல் மிகுதிக்கண் மேற்சென்றிடித்தற் பொருட்டு" என்பதும் விதியாயிற்றே.

66. அந்நியர்கட்கு எச்சி லுணவுகளைப்படைக்கலாகாது, உயிர்க்கொலை செய்யலாகாது, லாகிரி வஸ்துக்களை தின்னலாகாது, கூத்துபார்க்க போகலாகாது, சூதாடலாகாது, அந்நியர்கிருகத்தில் போய் உறங்கலாகாது,கணவனைப்பேரிட்டழைக்கலாகாது.

67. வாழ்க்கைக்கு வேண்டியபொருள்களையறிந்து காப்பாற்றிவைத்தலும,உண்டிசமைத்தலில் வல்லமையும், உபகாரஞ்செய்தலும்,வருவாய்க்குத்தக்கபடி செலவழித்தலும் பெண்களுக்கு அவசியமிருக்கவேண்டும.

68. பரபுருஷர்களுடைய இளமை அழகு, செல்வமுதலியவற்றுள் மனமயங்கி அவர்களிடத்து இச்சைசெல்லும்படி இடந்தரலாகாது.

69. நற்குண நற்செய்கையிற் சிறந்தும், உலகம பழிப்பதற்கிடங்கொடாமலும்,சத்தியவிரதங்கெடாமலும், நாயகனே கடவுளென்று, தன

புண்தானேயே தனக்குககாவலாகவுங் கொணடிருககும பதிவிரதையால புருடனுக்கு நேரிடும் விபததும நீஙகிஅழியாச செலவமுமுண்டாகும.

70. கோடைகாலம, மழைககாலம இபபடிபபட்ட காலஙகளில இலவாழ்க்கைக்கு வேணடியவைகளேச சமயமறிந்து சேகரித்துக் காபபாறறல வேண்டும. காரெலியும ஆகாரததை உததேசிததுச சோத்துக கொளள வேணடிய காலஙகளில தானியமுதலிய வறறை வயலிடததுளள வளேகளிற சேர்த்துக கொளளுவதை நாமபாாபபதே போதுமான சாட்சியாயிருககிறது

71. அந்நியருடையபொருளேக் களவிலாகிலும திருடநினேக்கலாகாது. அப்படிககளவினுலசேரும் செலவம அப்போதுமாத்திரம் வளர்வதுபோலககாட்டி உள்ளபொருளோடு யானேயுணடவிளஙகனிபோல் இதுவும் அழியும். மேலும இப்படிப்பட்டவர் இம்மையில் அரசனுலும் மறறோராலும் தண்டனே, அவமானம், முதலியவை அடைவதோடு மறுமையில நரகததிலும் தள்ளபபடுவா." களவினுலாகிய வாக்கமள விறந்தாவது போலக்கெடும்" என்பதுமது.

72. மாமன், மாமி முதலியபந்துக்களேயும, மற்றுமுள்ள பெரியோர்களேயும் பூசித்து மரியாதை, பணிவிடைகளில் குன்றுமல் நடந்துகொள்ளவேண்டும்;" பெரியாரைப் பேணுதொழுகிற் பெரியாரால் போரவிடும்பைதரும்" என்பதுமது.

73. வீட்டிலுள்ள உடைமைகளைக் கொழுநனது அநுமதியின்றி பிறருக்குக்கொடுத்தலும் கொதுவைவைத்தலும் அல்லது பொருளை வட்டிக்குக் கொடுத்தலுமாகாவாம்.

74. தன் பிள்ளைக்குமாத்திரம் எல்லா விதநனமையும் பாக்கியமும் தேடிவைத்து, சக்களத்திப்பிள்ளைகளை கஞ்சிக்கலையும்படிக்கோவணாண்டிகளாக்கி விடுதல் கூடாது.

75. மிக்க செல்வவந்தனுகிய ஒருவனுக்கு வாழ்ககைப்பட்டால அசசெலவம் நல்வினைவசத்தால வருதல் கூததாடல செய்கின்ற அவையினிடத்து சேருமட, ஜனக்கூட்டத்தை ஒககுமட, அதுகலைந்தபோது அச்செலவம் நீங்குதல், அக்கூட்டம் கலைந்துபோதலை ஒக்கும். ஆகையால நிலையற்ற செல்வம் வந்தபோது களியாமலும, வறுமைவநதபோது துக்கிக்காமலும இரணடினிடத்தும் இசைந்து அனுபவித்தல வேணடும.

76. "உலகத்தோடொத்துவாழ்" என்ற முதுமறையின்படிஎபபோதுமஉலகத்தாாநடக்கும் மாாக்கங்களில் தானுமட, தன் கொழுநனும் வழுவின்றி நடநது கொள்ள வேண்டும.

77. அந்நியர் தனக்குக்கெடுதி செய்யினுந்தானும் அங்ஙனஞ்செய்ய சமயம்பார்த்திரா

மல் உடனே மறத்தல்வேண்டும். ஆனல் நன்றி செய்தால் அதை எப்போதும் மறக்கலாகாது. "நன்றிமறப்பது நன்றன்று நன்றல்ல தன்றேமறப்பது நன்று" என்றது மிக்கருத்தே.

78. தாகமெடுத்தவனுக்குத் தண்ணீரும், பசியால் பீடிக்கப்பட்டவனுக்கு அன்னமும், இருக்க இடமில்லாமல் அலைபவனுக்கு மனையையும், இரப்பவனுக்குப் பொருளையும் தானஞ்செய்யவேண்டும்.

79. அந்நியர்களுடைய பொருளை வஞ்சனையால் வாங்கிக்கொண்டு பின்னர் அவர்களைத் துயரக்கடலில் முழுகும்படிசெய்தல், அந்நியர்களைப்பழித்தல், அநாசாரத்தை யநுஷ்டித்தல், துவேஷங் கொள்ளுதல, வீணாசை கொள்ளுதல் ஆகிய இவைமுதலிய யாவுங் குற்றங்களாம.

80. புருடன் அடித்தால் பத்திரகாளியைப் போல தெருவில வந்து ஓலமிட்டுப் புருடனை அவமானபபடுத்துபவள் இம்மையிலேயும கொடிய வேதனைகளை அநுபவித்துக் கொண்டிருப்பாள்.

81. அந்நியரைக்காணு விடத்து அவர்கள் குற்றங்களைப் பலரறியக் கூறுதலும், கண்டவிடத்து புகழ்தலும, ஒருவா மொழிந்த பழிவார்த்தை

களை மற்ருெருவருக்குக் கூறிக்கலகஞ் செய்தலு மாகாவாம “ புறங்கூறிப் பொய்த்துயிர் வாழ்தலிற சாதல் அறங்கூறுமாக்கந்தரும் ” என்பது விதியாயி றறே.

82. பிரமசாரிக்கும்,வானப்பிரஸ்தனுககும,சந்நியாசிக்கும், பசி,நோய்,குளிர்முதலியவைகளால் நேரிடும்துன்பங்கட்கு இடையூறுவாராமலஉண்டி,மருந்து,முதலியவைகளைக்கொடுத்து தானும் தன் கொழுநனும் அவர்களுக்குத்துணையாய்நின்று காப்பாற்றவேண்டும்.

83. தேவாலயம நித்தியோறசவத்தினுலும், இராத்திரி பூரணசந்திரனுலும், பிரகாசிபபது போல் ஒருகுடும்பம நற்குண நற்செய்கையுளள பெண்ணினுல பிரகாசிக்கும.

84. தன்னுயகன் கரத்தால்எப்பொருளைக் கொடுபபினுங்குறைவென்றெண்ணுமல்நிறைவாயக்கொள்ளவேண்டும். நாயகன் ஒருவருக் கொன்றளித்தாலதானும் அதற்கு அநுகூலமாக இருக்கவேண்டும.தன்வசத்திலொப்புவித்தபொருளை உயிர போற் காத்து, கேட்டபோது தடையின்றி உதவவேணடும.

85. எவராயினும் தன்னைமட்டு மரியாதையின்றி வைதாலும, அதனையொரு பொருளாக மதியாமல மௌனமாயிருத்தல்வேண்டுமேயல்லது எதிரிட்டுச்சண்டை செய்யலாகாது “அ

ழ்வாரைத்தாங்கு நிலம் போலத்தம்மை இகழ்வார்ப் பொறுத்தறலே" என்று தெய்வப்புலமை நாயனரு கூறியுள்ளனர்.

86. மனைவியால் கணவன் களிப்பினையடைந்தவனும், மனைவியுங் கணவனுல் களிப்பினை அடைந்தவளாயுமளக்குடும்பத்திலிருப்பாரோ அக குடும்பத்துக்குக் குறைவிலலாமங்கள முண்டாகும.

87. வாசற்படி, உரல், உலக்கை, முறம் அம்மி முதலிய இடங்களில் உட்காரலாகாது. மலம, மூத்திரம,மயிர், சாம்பல, உமி, கரி, எலுமபு மணடையோடு இவற்றினை மிதிக்கலாகாது.

88. மாதர்கள் புருடரிடத்து மாத்திரம் அன்புடையவர்களாய அவரேநமக்குப்பிரதானம னறி அவரை யீன்றெடுத்தவர்கள் நமக்குவேண் டுவதில்லையென்றுநிராகரிக்கலாகாது. "கலபபண தகைபபாரக்கிலும ஒருகிழப்பிணமிருப்பதுமேல்" என்னும பழமொழியுமது.

89. தன்வீட்டிலுள்ள, நாத்தனமார், ஓரகத்தி, மாமியார் முதலாயினர்"ஆனைக்கும அடிசறுக்கும" என்னுமபழமொழிக் கிணஙகக்குடித்தனபாகங்கில், அற்பகுற்றமசெய்யும்படிநேரிட்டாலும,அலலது அடாததை ஒருக்கால் செய்தாலும அதைபபெரிதாய் எண்ணி குண்டுணிகளைபபோல் கோள்மூட்டி குட்டிக்கலகஞ் செய்யலாகாது.

90. சுபாசுபங்களில் யார்யாருக்கு எந்தெந்த மரியாதைகள்வழுவின்றி நடத்தல்வேண்டுமோ அவைகளைத்தன்னாலியன்றளவுமனமொத்து செய்யவேண்டும.

91. ஆசாரியனுடைய கடாக்ஷமின்றி சிஷ்யனுக்கு எப்படி ஞானம உதயமாகமாட்டாதோ அதுபோல் இல்வாழ்க்கையில அநுபவமுதிர்ச்சியிற்றேர்ந்த, மாமியார இடித்துக்கூறும்புத்திமதிகளைக் கவனியாத மருகியர்களுக்கும இலவாழ்க்கை யினியல்பு விளங்காது. "பொன்னானமருமகளாயினும மண்ணாலோர மாமி வேண்டும்" என்பது வுலகவழக்கலலவா.

92. தன்இனத்தாரில இவனஏழையென்று அவனைநீக்கநினைத்தலும, இவன்தனவானென்று அவனை அநுசரித்தலுமகூடாது. யாவரையும சமமாயப்பாவித்து இலலறம நடத்தவேணடும.

93. மாமன்,மாமி முதலியோர்நாற்பதுசென்றாலநாய்க்குணமென்பதுபோல்,துணதுணவென்று பேசி நிஷ்டூர வார்த்தைகளால் வைதாலும, தண்டித்தாலும அவைகளைக் கவனியாமல் இவளே திருமகளென்று கொண்டாடும்படி பெயரெடுக்கவேண்டும.

94. கணவன்,மாமி,மாமன்,முதலாயினோரொருவரை வாய்மலர்ந்துகேட்குமுன்னரே தா

ய் பரிந்தூட்டும் தன்மைபோல் குறிப்பாலுண ர்ந்து அதைமுன்னுதாய் நடத்திவைக்கவேண்டும.

95. தாய் தந்தையர்கள் வழிவைச்சேர்ந்த உறவினர் வந்தவுடன்மரியாதைகள் புரிந்து அறு சுவையுண்டியளித்து, நலலவஸ்திராபரணஙகள் கொடுதது உபசரித்தலும், மாமன், மாமியைசசார்ந்தவாகளாயிருப்பின் அவர்களை ஏறெடுததுநோக்காமலிருத்தலும் ஆகாவாம். இருபக்ஷத்திலும தன்னுலியன்றமட்டும் தக்கமரியாதைகள்செய்து முகமலாசசியாய் அனுபபவேணடும.

96. மாமன்,மாமி,ஓரகத்தி,மைததுனாமுதலியோா இட்டகட்டளையை மீறி இவாகள்யாா? நமககும் அவாகளுக்கும என்னசமபந்தம? என்று அசட்டைசெய்யலாகாது. இவாகளே தனககு பபெருந்துணை யெனறுநமபவேண்டும

97. தூரஸ்திரிவிலக்காயுள்ள மூன்றுநாட்களிலும் எந்தபதார்த்தங்களையுந்திண்டாமல் நான்காநாள்ஸ்நானஞ்செய்து, தன்னுயகனமுகத்திலேயேவிழித்தல்வேண்டும்; அவரிலலையாயின்தலைவனை மனத்தில் உன்னி, சூரியனைநமஸ்கரிக்கவேண்டும்.

98. புருடன்தேகவியோகம்ஆகுங்காலையிலஅவன்மனங்கலங்கும்படிமேலேவிழ்ந்து அழலாகாது. அவன் மனம் ஆண்டவனிடத்தில்

மகாமகோபாத்தியாய, டாக்டர்
உ. வே. சாமிநாதையர் நூல் நிலையம்
அடையாறு, சென்னை-20.

உ

# கற்புடையவர்களது
## பிரபாவவிவரணம்

மத்திரதேசாதிபதியென்னும் அசுவபதிமஹாராஜன் மனைவியாகிய தேவியுடன் கூடிவாழுநாளில் சகல சாம்பிராச்சியம சம்பூரணமாயிருந்தும் புத்திரப் பேறில்லைக் கொடுமையால வருந்த முற்றிருக்கையில், திரிலோக வாசியாகிய நாரதமுனிவரைத் தரிசிக்கப் பெற்று அவரிடமாய்த் தங்கள குறைகளை முறையிட, அவர் தேவியார் கடாக்ஷத்தால் இன்னம் சிலகாலத்திற்குள் ஒரு குழந்தை பிறக்குமென்று சொல்லியபோயினர் அவ்வண்ணமே சிலகாலங் கழிந்து பார்வதியார் அநுக்கிரகத்தால் நல்ல சுபமுகூர்த்தத்தில், தேஜோமயமாகிய வொருமகளைப் பெற்று, சாவித்திரியென்று நாமகரணஞ் செய்து வளர்த்து மங்கைபருவம் வந்தகாலத்து, இவளுக்குத் தகுந்த நாயகன் வேண்டுமே எங்கு வாய்ப்பனென்று தந்தை தாயிருவரும் ஏங்கியிருக்கையில், ஒருநாள முன்போலவே நாரதமுனிவர் வரவும், அவரை எதிர்கொண்டு ஆசனத்திலிருத்தி, மனங்குழைந்து, அம்முனீந்திரரைப் பார்த்து, தேவர் கட்டளைப்படி உதித்த சாவித்திரிக்குத் தகுந்த கொழுநன் வேண்டுமேயென்று சஞ்சலப்படுகின்றோ

மென்று கூற, அதற்கு யாழ்முனிவர் அவ
ரவர்கள் வினையின் வண்ணமே எதுவும் நடக்கு
மாதலின் [illegible] யோசிக்கவேண்டாம். சாவஜீ
வத்யாபதியின் புத்திரி சாவித்திரியினது மனத்தில்
குறித்திருக்கும் தலைவனையே தலைவனாக விதித்
திருக்கின்றார். அவனுக்கே பாணிக்கிரஹணஞ்
செய்து கொடுப்பது உத்தமமென்று நவிலக்கே
ட்டு, இராஜன் குமாரத்தியினது முகத்தை நோக்
கி அம்மா! உன் மனத்தில் குறித்திருக்கும் நா
யகனை சொல்லென்று கேட்க, பூருவமங்கையா
தன்னை சற்று நோக்காமலிருந்து, ஐயா! நான் சி
று பெண்ணாகிய காலத்தில் பூங்காவனத்தில் என்
சேடியர்களோடு விளையாடிக்கொண்டிருந்தபோ
து, சாளுவ தேசாதிபதி குமாரன் சத்தியவான்
அவ்வழியாய்க் குதிரையின்மேல் போகக்கண்டு,
அன்றே நெஞ்சில் அவனை வரித்தேனென்று
மொழிய, இதனை நாரதரிடத்து விண்ணப்பஞ்
செய்து சுவாமி! அந்தச்சாளுவ தேசாதிபதியின்
புத்திரசிகாமணியாகிய சத்தியவானுடைய குண
விசயங்களை தயைசெய்து செப்பவேண்டுமென்று பூ
ணிவர் கேட்டனர். பகவான் ஸ்ரீ நாரதமுனிவர்
மொழிகின்றார்: அந்த இறைவன் அழகில் சிறந்த
வன். ஆண்மையில் உயர்ந்தவன். ஆகிலும் இளை
ம ஒரு வருடத்திற்கு மேல் [illegible] வன். அவ்வன
[illegible]
[illegible]
[illegible]

ஞ்செய்கின்றீர்களென்றுகூறி தமமிருப்பிடம
போய்சேர்ந்தனர். இதைக்கேட்ட மாதாபிதாக
கள் மிகுதியும வருத்தமுற்று தமசெல்வக்குமா
ரத்தியை நோக்கி, நாரதமுனிவர் கூறினதைக்
கேட்டனையன்றோ? அவர்கள் புத்திரனை மணக்க
விரும்புவது தகுதியன்று. வேறுபுருடனை விரும
புவையென்று கூற, சாவித்திரி அவர்கள் வருத
தமுற்று வனத்திலிருந்தாலும், இன்மை வர
வேண்டிய தீயவை நேரிட்டாலும, அந்தச் சத்தி
யவானே நாயகன் நானே அவருக்குப் பத்தினி
யென்வினையின் வண்ணம் நடக்குமேயன்றி வே
றாடவாது. ஆகையால் நீங்கள் ஒன்றுக்குஞ் சிந்
திக்காமல என்னை சத்தியவானுக்கே விவாஹஞ்
செய்துகொடுத்துவிடுங்களென்று சொல்லினள்
அப்படியே மத்திரதேசாதிபதி வனத்திலிருக்கும
சத்தியவான் தந்தை தாயர்களைச்சென்றுநோக்கி எ
ன்பெண் உம்முடைய குமாரனை விவாஹஞ்செய்து
கொள்ளக்கருதினள் என்றுகூற, சாலுவராஜனுஞ்ச
றாலோசித்துச்சம்மதித்தனன். உடனே மத்திர
தேசாதிபதி நல்ல சுபமுகூர்த்தத்தில் கன்னிகா
தானமாகச் செய்து முடித்துக் குமாரத்திக்குச
சில நீதிகளைக்கூறி, தன்னிருப்பிடம்போய் சேர்ந
தான். இப்பால் சாவித்திரியும், சத்தியவானும
பாலும் பழமும், உடலும் உயிரும்போல மனம
பொருந்தி வாழுங்காலத்தில், சாவித்திரி மூன்று
வது சாமத்தில் எழுந்து நித்தியக்கடன்களை முடி

த்துக் கொண்டு கனி காய்களைக் கொண்டுவரும படி நாயகன் சென்றபின், மாமன் மாமியாரை நித்திரை நீக்கி அவர்கட்குச் செய்யவேண்டிய பணிவிடைகள் புரிந்து தருமகதைகளைப் பேசிக்கொண்டு, அன்னோர் கால்களையும கரங்களையும மெலலெனப்பிடித்துக் கொண்டிருந்து, நாயகன் வந்தவுடன் அவன் கொண்டுவந்த காய்கனி கிழங்குகளை இருவருக்குமூண்பித்து, அப்பால் தன் காதலனுக்குக் களைதீரச்செய்து, அவன் உண்டபின்பு அவனுண்ட சேஷத்தை அருவருப்பில்லாமல அமிர்தமபோல உண்டு, கண்டோர் அருந்ததி இவளெனக் கூறும்படி ஒழுகி அகமகிழ்ந்திருக்குநாளில், பகவான நாரதமுனிவர் நவின்ற வாக்கியத்தை மனத்திலிருத்திவருந்தும இத்தையலுயரி ஒவ்வொரு நாளாகக் கணக்கிட்டு இன்னும நான்கு நாளிருக்கின்றன, தன் நாயகனுக்கு ஆயுளென்று கருதி மிகுந்த சாக்கிரதையுடன் மூன்று நாள் வரையும் அன்னபான முதலியவை நீக்கி, தேவியாரை தியானித்துக் கொண்டு, நான்காநாள் உதயத்திற்கு முன்னெழுந்து, கணவனை நோக்கித் தமியனும் தேவருடன் காட்டிற்கு வருகின்றேன் தடைசொல்லாமல் அடியேனையும உடன் கொண்டு போகவேண்டுமென்று இரந்து கேட்டுக் கொண்டனள். அது கேட்ட சத்தியவான் என் தாய் தந்தையரது கட்டளை பெற்று வருவாயாயின் வரலாமென்று சொல்ல, அங்ஙனமே மாமன் மாமியர்களை வணங்கி, உங்கள் குமாரரோ

டு காட்டுக்குப் போய்வருகின்றேனென்று வின
ணப்பஞ் செய்தனள். அவர்களும் நல்வினை வசத்
தால் உடன்பட்டுப் புத்திரனையழைத்து, இப்
பெண்ணை ஜாக்கிரதையாய் அழைத்துக்கொண்டு
போய் வெகு விரைவில் வரக்கடவையென்று ஆ
சீர்வதித்து அனுப்பினர். இவ்விருவரும் சந்தோ
ஷத்துடன் வனத்திற்குச் செல்லுகையில் சாவி
த்திரியானவள் பருந்துடன் நிழல் சென்றாற்போ
லப் பிரியாமல் தொடர்ந்து பின் பற்றும் போது
பற்பல கனிகளையுடைய ஒரு விருக்ஷத்தைக் க
ண்டு அதில் ஏறுவதற்கு விரும்பிய சத்தியவானா
னவன் தன் பத்தினியை நோக்கி, இப்போது எ
ன் கரங்கள் கால்கள் நடுங்குகின்றன; ஓய்ந்து
போகின்றன; கண்கள் சுழன்று ஒளிமழுங்குகி
ன்றன; சுவாசம் தடுமாறுகின்றனவென்று சொ
ல்லிச் சாய்ந்தான். அங்ஙனஞ் சாய்ந்த காதலனை
த் தன்மடியின் மீது சிரத்தைவைத்துப் படுக்கச்
செய்து கொண்டு ஏங்கியிருக்குஞ் சமயத்தில், யம
ன் பதிவிரதையாகிய சாவித்திரியம்மையை நெரு
ங்கிவர உடல் நடுங்கி மெதுவாக வந்து சத்திய
வானுடைய பிராணனைக் காந்தம் இரும்பை இழு
க்குந் தன்மைபோல் கைக்கொண்டு நடக்கக்கண்
ணுற்ற சாவித்திரி தன் மடியிலிருந்த சிரசை பூமி
யில் வைத்துவிட்டு, தன் கண்களுக்கு நேராகக்
காணுகின்ற மஹாபுருஷனைத் தொடர்ந்து போ
கையில், மறலியானவன் திரும்பிப் பார்த்து நீயா
ரம்மா வென்று வினவினன்? சாவித்திரி தீர்க்க

தொண்டரு செய்து சுவாமி என் நாயகனுடைய பி
ராணனைக் கைக்கொண்டு போகின்ற நீர் யாரை
யாவென்று கேட்க? தென்றிசைக்கோன் நகைத்
து பதிவிரதையின் மஹத்துவத்திற்குச் சந்
தோஷங் கொண்டு அம்மா கேளாய் நான் சங்கா
ரத் தொழில் செய்கின்ற யமன்; உன்னுடைய பு
ருஷனுக்கு ஆயுள் இன்று பதினைந்து நாழிகையுடன்
முடிந்துவிட்டது. இந்தச் சத்தியவானஉத்தமனு
டையவ்ன நானேவந்து கைக்கொண்டேன்; நான்
தேவன. நீங்கள் இருவீரும் மக்கள். உமமுடைய
நற்குண நற்செய்கையால என்னைக்காணப்பெ
ற்றீர், நீயேன் கால்வருந்த வருகின்றனை, இவ்வி
டத்தில் நில்லென்று சொல்லினன். அந்த அம்
மாள் நாயகனிருவரும உடலும், உயிரும போலி
ருந்தோம, உடலைவிட்டு உயிரைக் கொண்டு போ
வது நீதியன்று என்னையும் உடன் கொண்டு போ
வது உத்தமமென்றியம்பக் கேட்ட கூற்றுவன்
ஆயுள்முடியாமல உன்னை யழைத்துக்கொண்டு
போக என்றால் இயலாது; ஆகையால் உனக்குப்
புருடன் தவிர வேறுவரங்களை எதாகிலும் வே
ண்டியிருந்தால் கேளாயென்று. கூறினா. அம
மொழியைக்கேட்டு ஆண்டவனே! என்மாமனா
மாமியார் இருவருக்குங் கண்கள் தெரியுமபடி
கடாட்சிக்க வேண்டுமென்று கேட்க அப்படியே
கொடுத்தேனென்று சொல்லிமறுபடி நடக்கவும
பெண்ணரசி பின்னும் விடாது தொடர்ந்து வரு

வதை அந்தகனைக்கண்டு என்னமமா நீ ஒன்றியாக
வருகின்றனையே? வியர்வை பெருகவருந்தி வரு
வானேன்? கின்றுவிடென்றுகூறினன். அதற்குசா
வித்திரி நாயகனில்லாவாழ்வுநஷ்டமெனறும, புரு
டனையிழந்த பூவைபின்னமென்றும, என்போ
லொத்தபெண்கள்யாவருமசெழித்துககளிக்கவும
நான் கண்ணீா சொரிந்து தத்தளிக்கவுஞ்செயலா
து உமக்கழகன்றென்றும சொல்லிய புலம்பின
ள். அதற்கு யமன் இவ்வுயிர் தவிர வேண்டியவர
ததைக கேளென்ன, தன்மாமனருக்குப பழைய
படி இராசசிய சம்பிரமச செல்வஙக ளெல்லாம
கிடைக்குமபடிவேண்ட அப்படியே ஆகுகவென
று சொலலி தென்றிசைகநோக நடகக, விடாமல
தொடாந்து நெடுந்தூரம பின்தொடாவதைகக
ண்டு தாயே! ஏனிப்படி வருந்துகின்றாய் ஜன்மி
க்குமபோதே ஆயுள் இவ்வளவென்றுநிர்ணயித
திருககிறது. அவரவாகளே நன்மை தீமைக்குத
தககதாய் நடத்துவேன. ஆகையால வேறுவரங்க
ளைக கேட்டுக் கொள்ளலாமென்று கூறினன
அம்மொழியைக்கேட்டு சாவித்திரி என் தந்தைசி
கதைகளிக்கும்படி நூறுமைந்தரைத்தந்தருள வே
ண்டுமென்று கேட்க, அப்படியே தந்தேனென
றுகூறி அந்தரத்தில் மறைந்துபோயின
ன். அப்பால் சாவித்திரி சிந்தைகலங்கிவந்தவழி
தெரியாமல் எந்தவழிமறைந்தா னென்று ஏங
கித்தென்றிசையை நாடி ஓட்டமும் நடைய
மாக விரைந்து வருவதைக்கண்டு ஒருகற்புடையு

பெண்மனம பொருந்தால ஏதாமோ, எபபடிவிளை யுமோவென்று சிந்தித்துக் கூற்றுவன் எதிரில தோன்றி அமமா! உனககு அனேக வரமுமகொ டுததேனென்றுகூற, சாவித்திரி இன்னமுமமே லாகிய பாககியஙகளைக் கொடுத்தாலும அவையெ ன்னபலனைக் கொடுக்கும் இறைவனே! என்புரு ஷனையும தயைசெய்து விடுவீராகில் நீகொடுத் தபாக்கியமெலலாமபயன்படுமென்னக்கு மாஙகலய பிட்சை யருள்புரிந்து இரட்சிகக வேண்டுமென பிராஙகினள். அச்சாவித்திரியைக் கூற்றுவன நோககித்தாயே! நீ சிறந்த உத்தமியாதலால்உன்எ ண்ணத்தை நிறைவேற்றிக் கொண்டாய், யானு மெத்தவும மகிழ்ந்தேன். உன்னுடைய நாயகன்பி ழைக்கவும, நீ சகல நலஙகளையும் பெற்று வாழ வும நான் வரமளித்தேன். நீர் இருவிருமவாழ ககடவீரென்று ஆசீர்வதித்தான். சாவித்திரியம மை தருமனுக்குச்சாஷ்டாஙகமாகத்தண்டன்சமா பித்துவிடைபெற்றுக்கொண்டு, முன்னிருந்த வி டததிற்கு வந்து புருடனுடையசிரத்தை எடுத்து மடிமீது வைத்து முகத்தைப்பார்த்துக்கொண்டி ருக்குமபோது, நித்திரை நீஙகி எழுந்தவரைப போலெழுந்து, மனைவியினுடைய முகத்தைப்பா ர்த்து கணணயாந்து நித்திரை செய்தேனே, என எழுப்பாமல் போனாய்? பகலும் கழிந்தது, தாய தந்தையர்கள் வருந்துவார்களே மேலும் ஒரு தி வ்ய புருஷன் என்னைக் கைக்கொண்டுபோகவும, ஒருத்தமப்பெண்பின் தொடர்ந்து அவன் கைத்து

னின்று மீட்டுக்கொண்டுவரவும், சொப்பனங் கண்டு விழித்துக் கொண்டேனென்று சொல்லினன். அச்சொல்லைக்கேட்ட சாவித்திரியானவள் நாயகன் முகத்தை நோக்கி நீர்கண்டது கனவன்று, நிஜமான காரியந்தானென்று கூறி இருவரும் வீட்டிற்கு அதிவேகமாய் வரும்போது, இவர்கள் வரவை எதிர் பார்த்துக்கொண்டிருக்கும் அன்னை தந்தையர்கள் மனம் நொந்து வாடித் தங்களிருக்கு மிடத்தில நிழல் சாய்வதைக் கண்டு ஐயோ பொழுது போய்விட்டதே, எம்புத்திரனையும் மருமகளையும் இதுவரையும் வரக்காணோமே? எங்களுக்குங் கண் தெரிகின்றதே இதென்ன வாச்சரியமென நினைக்கையில மகனும் மருமகளும் வந்து சாஷ்டாங்கமாகத் தண்டமிட்டு அம்முதியவர்களுக்குக் கண்தெரிவதைக் கண்டு சந்தோஷங் கொண்டமைந்தனையும் மருமகளையும் வாரி அணைத்து முத்தமிட்டு, காலையில் போன நீங்கள் இதுகாறும் வாராமலிருந்த காரணமென்னவென்று கேட்டனர். சாவித்திரியானவள் ஆதியோடந்தமாய் நடந்த விருத்தாந்தங்களைச் சொல்லக் கேள்வியுற்று மாமனாரும், மாமியாரும், மருமகளுடைய மகத்துவங்களை நினைந்து ஆநந்தப்பரவசராய், அம்மணி! சிந்தாமணி! பாக்கியவதி! நீ எங்கட்கு மருமகளாய் வாய்த்த போதே இனியாது குறைவு எங்கட்குள்ளதென்று சொல்லி, வனத்தில் யாவரும் வாழ்ந்து கொண்டிருக்கு

நாளில், சாலுவதேசத்தை சண்டையிட்டுப் பறித்துக் கொண்ட சத்துருவானவன் இறந்து போனான். பட்டணத்திற்கு அரசனில்லாமையால் பழைய மந்திரிகள் யானையை அலங்கரித்துக் கொண்டு வனத்திலிருக்குஞ் சாலுவ தேசாதிபதியைக் கண்டு வணங்கி யானையின மேலேற்றிக் கொண்டு வந்து ராஜபட்டாபிஷேகஞ் செய்தமையால், பழைய படி அசுவகி ராசசியபரிபாலனஞ் செய்து வந்தான்

---

விசிட்டாபுரமென்னும் பட்டணத்தில்கௌசிகனென்றொரு வேதியன் குட்டநோயால் மிகவும் வருந்திக்கொண்டிருந்தான. அவன்மனைவி அங்ஙனம நோயால வருந்துங் கணவனைத் தெய்வமாகப்பாவிதது, அவனுக்குச செயயவேணடியபணிவிடைகளவழுவின்றி நடத்திக்கொண்டுவந்தும, கொழுநனிட்ட ரவார்த்தைகளால வைதுகொண்டுவருவான. இப்படிககொழுநனும மனைவியும இல்லறமநடத்திக் கொணடுவருகையில, ஒருநாள் மனைவியைநோக்கிப்பெண்ணே! இராஜமார்க்கத்திலுள்ள கணிகை மாதொருத்தியைஇன்றுகண்டேன், கண்டதுமுதலமதனனம்புளனமார்பைப்பிளக்கின்றது. இப்பொழுது மாலையும வந்துவிட்டது. ஆகையால் எனக்கிதுகாறுஞ் செயதுவந்த பணிவிடைகளைக் காட்டிலும் இப்போது காமத்தால் வருந்தும என்னையெவ்விதத்திலாவது அவளிடம்சேரச செய்வையேல, உனக்கு எ

மகாமகோபாத்யாய, டாக்டர்
உ. வே. சாமிநாதையர் நூல் நிலை

லொழித நன்மைகளு முண்டாகும்; அப்படி நீ செய்யா தொழியின் என்னுயிருடன் பிரிவிட்டு நீங்குமென்றனன். அதனைக் காமத்தால் வருந்துங் கணவனுக்குத் திருப்தி செய்ய வெண்ணமுடையவளாய்த் தனதுடைமை நன்குடுத்து அமமாதினுக்குக் கொடுக்கத்தக்க பணயத்தினையும கைக்கொண்டு, தோளில் கொழுநனைத் தாங்கி அவவிராஜ மார்க்கமாகச் சென்றனள்; அவ்வழியில களவென்பது சற்று மறிந்திராத மாண்டவயரென்னும் மஹா இருடி களவுக் குற்றஞ் சாத்தபபட்டுக் கழுமுனையிலேற்றப் பட்டிருந்தனர். இவவிருளில மனைவியின் தோள்மேல செல்லுங கௌசிகனது காலபட்டு வருந்த, உடனே மாண்டவ்யருக்குக் கோபமபிறந்து யாரால காரணமின்றி யான் அசைக்கப்பட்டேனோ, அப்படிப்பட்ட அதமன் சூரியனை நோக்கினவுடன் நாசத்தையடையக் கடவனென்று சபித்தனர். இக்கொடுஞ் சாபத்தைக்கேட்ட கௌசிகன் மனைவி பொறுத்தவளாய் அங்ஙனமாயின் சூரியன் உதயமாகா தொழிக வெனத்தானுஞ் சபித்தனள். பிறகு உலகமெல்லாம இருள் சூழ்ந்து என்றும் இராவாகவேயிருந்தன. தேவர்கள் பிரமதேவனது கட்டளையால அத்திரிமுனிவின் பத்தினியாகிய அநசூயையை வழிபட்டு, அவ்வம்மையைத் துதித்தனர். தேவர்களால பூஜிக்கப்பெற்ற அவ்வநசூயை யானவா கௌசிகன் மனையாளது திருமனைக்குச் சென்றவுடன் அக்கற்புடையாள் எதிர்கொண்டு உபசாத்

மகாமகோபாத்யாய, டாக்டர்
உ. வே. சாமிநாதையர் நூல் நிலையம்

தோடு மழைத்து க்ஷேமங்களை விசாரித்துப் பிற
கு தாயே! என்சிறுகுடிலுக்கு எழுந்தருளியவா
றெதுவோ,' என்றாலாயினும என் கடவுளான த
லைவராலாயினும தேவருக்கு ஆகவேண்டிய கரும
மியாதோ என்று வினவினள். அபபோது அநசூ
யையானவள தேவாகள் என்னிடம வந்து குறை
யிரந்தனா. உன வாய்சசொலலினால இராபபகலு
ம அவவிராபபகலிலுண்டாம நற்கருமம இழந
தோராய் வருநதி முனபோலப்பகலிரவு உண்டாக
வேண்டுமென்று இரககின்றனர். அவர்கள் வே
ணடுகோளால நின மஙகலத திருமனைக்கு வந்தே
ன. ஆதலால பகலே இல்லாதொழிந்தால எத்தொ
ழில தான் நடக்கும். சூரியனைக்காணவிடின் ம
ழை பெய்யுமா? மழையின்றாகில உலகம பிழைக
குமா? உன் வாய்ச்சொலலினால உலகமே பாழ்படு
கின்றது. உலகமனைத்திற்கும உண்டாயிருக்கும
பேரிடரை யொழிக்கவேண்டுமென்னுங்கருணையு
னக்குண்டாகு மாயின் கற்புடையாளே! முன்
போலச சூரியோதயமாகும்படி அநுக்கிரகித் த
லைச்செய்யென்றாள். பினபு கௌசிகன் மனைவி
மாண்டவ்ய முனிவர் பெருஞ்சினங்கொண்டவ
ராயச சூரியனுதயமானால் நீ யிறந்தொழிவாயெ
ன்று என் தலைவனைச சபிததனரே யான் எ
ன செயக்கடவேன் என்றாள். அதற்கு அநசூ
யை ஓ புண்ணியவதி! யான் சொலலுஞ சொல
லுனக்கு இனிமையாயிருப்பின், என் மொழியா
ல நல்ல யாக்கை யுடையவனைப்பிழைத்திருக்கச்

மகாமகோபாத்யாய, டாக்டர்
வே. சாமிநாதையர் நூல் நிலையம்

செய்கின்றேன். இதில் ஐயமில்லை என்றுற்றலைப் பாரெனறு கூறினள். பின்னா அக்கௌசிகன் மனைவி அநசூயையினது மொழியைக் கேட்டுச்சூரியனை வரப்பிரார்த்தித்தனள். உடனே கதிரவன் உதயகிரியில தோன்றினன். பின்புக்கணதகிற்றலே அக்கற்புடையாள் கணவன் ஆவி உடமபினை விட்டது. அவனும் நிலத்து வீழ்ந்தான வீழ்கையில் அக்கற்புடையாள் தாங்கிக்கொண்டனள். அபபோது அநசூயை அவளை நோக்கி ஓ சௌபாக்கியவதி நீ வருந்த வேண்டாம் என்றுற்றலைப்பாா. யான் நெடுங்காலமாக என் கணவரைத்தொழுது சிறுதவமுடையவளாயிருககின்றேன். என் மனமானது எனது நாயகரோடு கலவி, அறிவு, ஒழுக்கம், வடிவு, அழகு, ஆற்றல, தவம, பெருமை செலவமுதலிய வற்றுளொன்றுனும ஒத்த வேறொருபுருடன் உள்ளானுகக்காணுமலிருப்பது எவவாறுசத்தியமாயிருக்கின்றதோ, அப்படிபபட்ட சத்தியத்தால இவ்வேதியனும நோயிழந்து, மீண்டும் இளமை பெற்று, உயிா பெற்று எழுந்து, மனைவியோடு நூறுவருடம் பிழைததிருக்கக் கடவன். என்கணவனுக்கு ஒபபான வேறு தெய்வத்தினை நான் பாராதது எவ்வாறு சத்தியமோ, அச்சத்தியத்தினுல இவ்வேதியன் மீட்டும் பிழைத்து நோயற்றவனுய் வாழ்க! நான எபபொழுதும் என் கொழுநரைப பூசிபபதற்கு மனம, வாக்கு, காயம் இவைகளால வழுவின்றி முயல்வது எவவாறு சத்தியமோ, அந்த

ச்சத்தியத்தால்இவ்வேதியன்பிழைக்கக் கடவனென்று பிரமாணத்தோடும் ழுக்கர்லுங் கூறினள். பின்னர் அக்கௌசிகன் பிழைத்தெழுந்து, இளமைபெற்றவனாய் மனைவியோடுசகல போகமும அநுபவித்துக் கொண்டு வாழ்ந்திருந்தான்.

---

ஓர் அரணியத்தில விழுது விட்டுத் தழைத்திருக்கின்ற ஆலமரக்கிளையில் சேவலும பேடையுமாகிய இரண்டு புறாக்களிருந்தன. அவ்விரண்டும தங்கள் வாழ்க்கை முறையில் மனமொருமித்து ஒன்றை விட்டொன்று பிரியாமல் வாசம் பண்ணிகொண்டு வருநாளையில், ஒருநாள் ஆண்புறா இரைதேடி வெளியே போயிருக்குஞ் சமயத்தில, பெண் புறாத் தன்னாயகனைத் தேடித் தமக்கியற்கை ஒலியின்படியே கூவிக்கொண்டிருக்கையில, ஒருவேடன் விலலும் அம்பும் பிடித்து வலையை விரித்து, இரையைத் தெளித்துச், சற்றப்புறத்தில் தழைந்த புதலில்மறைந்து, பட்சி மிருகங்களுக்கு இயமன்போல் ஒளித்திருந்தான். அப்போது அம்மரத்திலிருந்த பெண்புறாவானது கண்ணி குத்திவைத்திருக்கின்றதை உணராமல, வேடன் பழக்கிவைத்துள்ள புறாக்கள் அங்கிருக்கக் கண்டு பறந்து வந்து வீழ்ந்து வலையில அகப்பட்டுக் கொண்டது. உடனே அந்த வேடனானவன் ஓடிவந்து பெண்புறாவைப பிடித்து கூட்டில அடைத்து இன்னம் பறவைகளை எதிர

பார்த்துக்கொண்டிருக்கும் . காலையில, ஆகாயத்
தில் மேகங்களிந்து சூரியகிரணமறைவுபட
பெருங்காற்றடிப்ப மின்னல் பேரிடியுடனே
பெருமழை வருஷித்தது. இந்த வேடன் தோற்பா
வைபோல் நனைந்து நடுக்கமும் குளிருமுண்டாய
உடல் சிலிர்த்து, வெளேலென்று வெளுத்துக்,
கண்களிரண்டும் இருண்டு,காது மூக்கும அடைந
து, கருவிகரணங்களும் வலிகுறைந்து, பூமியில
வீழ்ந்தான். அந்தச்சமயத்தில ஆண்புறு ஆலம
ரத்திற்கு வந்து தன் பெண்புறுவைத்தேடி ஐ
யோ பெண்ணாயகமே! பெண்கள் சிகாமணியே!
பெண்களரசே! தெவிட்டா அமுதே! என்று பல
வாறு புலம்பி வாடி அந்தோ இந்த மழையில் எங
கே அகபபட்டுக்கொண்டையோ? வழி தெரியா
மல் நின்றையோ,என்னைத்தேடி வருந்துகின்றை
னையோவென்றுகூக்குரலிட்டுஎவ்விடத்திலுமோ
டி இலை இலையாய்த்தேடி இனி யென்னாசை யெ
வ்வாறுமோ ஏந்திழையே ! வேடன கையிலகப்ப
ட்டுக்கூட்டிலடைக்கபபட்ட விதம் அறியாமல வா
ய் விட்டலறிபேய் போலப பறந்து திரிந்தது. இப
படி மண்ணும் விண்ணும் இது படுகிற துன்பத்
தைக்கண்டு மற்ற பறவைகள் உள்ளங் கலஙகும்
படியாய்வருந்திச்சற்று நேரம் மூர்ச்சையாய் பி
ன்தெளிந்து நெடுமூச்செறிந்து கூறத் தொடங
கிற்று. பெண்ணே உன்னைக்கூடியநாள் முதல இந்
நாள் வரையும் ஒருநிமிடமேனும பிரிந்தறியே
னே. நீயும எனனைவிட்டு நீஙகின தில்லையே, எ

ன்னைசிறந்த பொருளாக எண்ணி மேன்மை பா ராட்டி என் கருத்தை யநுசரித்து எனக்குபசா ம புரிந்து வந்தையே, உடலிரண்டும் உயிரொன றுமாக விருந்தோமே, உன்னைப்பிரிந்த வென் னுயிர் இன்னமிருக்கின்றதே, உன் மனம எனன கலலோ? இருமபோ? ஆருடைய சிறையில் சிக்கி க்கொண்டாயோ? என்னை மறக்குங் காலம நோ நதோ? என்னைச்சேராமையால் இறந்து விட்டா யோ? பெருங்காற்றில் அகப்பட்டுபபறந்துவிட்டா யோ? இப்பூமியின் வாழ்க்கைதுறந்துவிட்டாயோ? எனறு மனைவியைநினைத்துக்கொண்டுகிலேசத்து டன் கண்ணீா விட்டழுதது. இந்த ஆண் புறுப்புல ம்புஞ் சஞ்சல வசனஙகளையெலலாமவேடனுடைய கூட்டில் அகபபட்டுள்ளபெண்புறுக்கேட்டு ஐயோ பாவம! நமமைக் குறித்துநம கணவர் ஏனிப படி துயரபபடுகின்றார் நடந்து விட்டகாரியத்தி றகு வேறு செயகையாதுளது? ஆஙகாலமெல லாம அனபுடன் வாழ்நதோம்.இது போஙகாலம ஏதோ பொலலாதகாலம் பிரிவினைக் காலம இதை க்குறித்துச் சஞ்சலபபடுவானேன் என்று மன வுறுதி கொண்டு தன்னுயகனைக் கூவியழைதது ஓ பிராணநாயகா? ஓ பிராணவலலபா! ஓபிராண சகிதா! என் வினையின் வசத்தால இநதவேட ன் கட்டிய வலையில வீழ்ந்து சிக்கி இவன்கைக் குள்ளாய விட்டேன்; நான் பெருந்தீவினையு டையவள். என்னை ஒருபொருட்டாக நினைத்து நீமனம் நொந்து வாடவேண்டியதிலலை, உமமு

டைய பேரறிவாண்மையை யெங்கே இழந்திர், நித்தியாநித்திய வஸ்து விவேகஞானத்தை மறந்த சமயம் வந்தவேளையில், மயங்கித் தாபப்படலாமா? அப்படிப்படுவதினால் பயனுண்டாகுமா? போனது போக நின்ற வரைக்கும் நிலைமுறை பிறழாமலிருந்து என்றைக்கும் லயமிலலாத இன்பத்தைத்தேடும்,என்னுற வைத்துறவாகக்கொள்ளும. இந்த வேடருடைய சமூக விசாரசலஙிய ம் எபபடிபபட்டதோ, இவரது பசி எத்தன்மையுடையதோ, நானொரு பிராணி அகபபட்டதை நம்பி வேறு ஆகாரம அகப்படாமையால் வெமபி, அபேக்ஷை கொண்டு வந்து மழை, குளிர், காற்றினால் மாய்ந்தவர்போல் ஓயந்துகிடக்கிறார், ஆதலால இவருடைய பசிக்கும் உபயோகபபடும் படியாய் நீர்சகாயம பண்ணும் ஐயா! இவ்வுலகத்தில தோற்றப்படுகின்ற நாமரூபம்யாவும் நசியும் பொருளேயல்லது வேறலல, இன்னும் பற்பல நாளிருந்தாலும் ஒருநாள் இறப்பது நிச்சயம, தூஙகுவதுபோல் இறப்பு தூஙகி விழிப்பது போல் பிறப்பு, இதையறிந்தும் இந்தப்புன் பிறவியின் போகத்தினால் மயங்குவதற்குக் காரணம் யாதோ? இந்த விசாரத்தை விவேக விசாரணையில் விட்டுவிடும். இவ்வேடுவருக்கு உபயோகமாகும்படி ஏதேனும்உபகரியும். ஐயோ இந்த வேடர் எண்ணிய எண்ணம் சம்பூரண மாகாமலிருக்கிறது, நமது இடத்தை விரும்பி வாத விருந்தாளிக்கு உண்டி உதவவேண்டிய கடமை நமதன்றோ?

வந்த விருந்தாளியைப் பட்டினியிருக்க நாம் பார்த்துக் கொண்டிருப்பது பாவமன்றோ? நம்முடைய வீட்டிலவந்தவனது குணதோஷங்களைப் பாராட்டாமல் அவனை நாம் அதிதியாய் ஏற்று, உண்டி முதலியவற்றால் உபசரிக்க வேண்டுமே ஆகையால இந்த வேடராகிய அதிதியின் விடாய் தீர்த்து மனத்திருப்தி செய்வீயும் ஐயனே! உம்மாலே எனக்கும் நல்ல பதவிகிடைக்கும். இனிமேல் நாமிருவரும் கூடிவாழ்ந்தால அநுபவித்த ஆசாபாசமேயல்லது வேறே நூதனமுண்டோ? நாமமனைவர்க்குக் காயங்களினாலே வஞ்சனையில்லாமல் நடந்தால் வருவது வரட்டும் போவது போகட்டும். இப்போது நீர் நனைந்திருக்க ஆபத்தினாலே ஒருவன் அவஸ்தையடைந்து விழுந்தால், அதைக்கண்டும் சும்மாயிருப்பது பாவத்திற்கிடமல்லவோ? என்று பற்பல விதமாகப் புருடன் மனத்தைத் தேற்றிய பெண்புறாவின் பேச்சைக் கேட்டு, ஆண்புறாவானது அறிவு தெளிந்துஸ்திரியின் மேலிருந்த ஆசாபாசத்தைத் தொலைத்து மழைச் காற்றினால் எழுந்திராமல் வலைகமோசமாய் விழுந்து கிடக்கிற வேடனண்டை வந்து நாங்களிருக்கும் இடந்தேடி வந்த காதரே! நீரிப்போது அடைந்திருக்கும் வருத்தத்திற்கு நான் செய்யவேண்டிய உபகாரம் இன்னதென்று இயும்புவீராகில் அவ்வாறு நடக்கச் சித்தமாயிருக்கிறேனென்று மொழிந்தது. அதைக்கேட்ட வேடனானவன் அப்புறாச்சேவலே! காளிக்கவேலை பிழைத்தே

ழுந்திருக்கும்படி எனக்குண்டாயிருக்கும் குளி
ரை போக்கி விடுவாயாகில், இதற்கு மேலாகிய
உதவியில்லை யென்று வேடன் வேண்டிக்கொண
டான். அந்நேரமே, அந்தப புறுவானது அதிக
வேகமாய்ப் பறந்து முறிந்து உலர்ந்து கிடக்கிற
சிறியவிறகுகளை மூக்கினாற் கௌவிக்கொண்டு வ
ந்து சோத்துக் காட்டுத்தீ மூட்டித் தன்னு
டைய இறகை விரித்து வீசிக் காற்றினாலெ
எரியச்செய்து வேடனுக்கு சூடுறைக்கப் பண்
ணியபோது,வேடன் புரண்டெழுந்து முன்னு
ம் பின்னும் தீக்காய்ந்து,குளிருமபோய்,ஈரம்
புலர்ந்து,திமிர்வாங்கிக், கையைக காலை நீட்டி
யசைத்து, கெட்டைவிட்டு,கோடுவாய்விட்டு,
மெள்ளவெழுந்து, அதிகப்பசியினால் வருந்தி
வாடுகிற வேடனுடைய பசிநோயை யறிந்து,
இந்த ஆண்புறுவானது ஓ அரணியவாசி! உம
க்கு மிகுதியும் இளைப்பும களைப்புமாயிருக்கிற
தாகத் தோன்றுகிறது. நான் இந்தப் பட்சியு
டம்பு எடுத்ததற்கு உன்பசியாறச் செய்வதே
எனக்கும் போதுமான பிரயோசனமாகக் கா
ணப்படுகிறது. அதுபற்றி நீர் பசியினால் வரு
த்தப்பட வேண்டா. நானிந்த நெருப்பிலே வி
ழுந்து இறக்கிறேன் என்னை யெடுத்துப் புசித்
து உமதுபசியை தீர்த்துக் கொள்ளுமென்று
சொல்லி ஆகாயத்திலெழுந்து படபடவென்
று இறகை உதறிக் கடவுளே! உன்னுணையால்
நல்வினைத் தீவினைப் பயனை அநுபவிப்பதற்கு

எடுத்த இந்தத் தேகமானது பசித்துவந்த அ
திதியாகிய வேடருக்கு இரையாகக கடவதெ
ன்று மூன்றுமுறை கூவிச் சிறகைகயொடுக்கிக
கொண்டு நெருப்பில் வீழ்ந்து இறந்தது. அ
தைப் பார்த்திருந்த வேடன் அதிசயப்பட்டு
அந்தப்புறுவை வெந்தபின் னெடுத்துச் சாப்
பிட்டுத் தண்ணீர் குடித்துப் பசிதணிந்து அக
ம குளிர்ந்து முகமலர்ந்து, தருமத்தை நினை
து இந்தத் தரணியில் பிறந்த ஆத்மாக்களில்
பேரறிவுடைய இந்தப்புறுவானது மெத்த அ
ருமையானது நான் இதுவரையிலும் இப்படி
ப்பட்ட சொதுவைப் பார்த்ததுமில்லை கேட்
டதுமில்லை ஐயோ! இதனது பேடை என்கை
யிலகப் பட்டிருக்கப் பிரபஞ்ச வாழ்க்கைப் ப
டிப்புலம் பித்தவித்து அந்தத் துக்கத்தை
யுடனே மறந்து, நமது கொடுமையையும் பாரா
ட்டாமற், நமது உயிரையும் புரந்து, நம்மு
டைய குளிரையும் போக்கித், தன்னுயிரை அ
ணுமாத்திரமும் மதியாமல் மாய்த்துத் தன்னு
டலையும் நமது பசிக்கு உதவியாக்கியது. இத்
தனை உபசாரம் பண்ணிய ஒரு பட்சிக்கிருந்த
நல்லறிவு நமக்கில்லாமற் போனதென்ன?
நாம் மன வுணர்ச்சியுள்ள மானிடபிறவியல்
லேமோ? பாழான பசி நிமித்தம் இதைப்பு
சித்து விட்டோம், என்னைப்போல பாப செ
னை யில்லை யென்று பரிதவித்து அற்ப வுயி
ரை வளர்ப்பதற்காகவா புல ஆத்மாக்களை வ

தைப்பது அப்படி உயிர்வதை செய்து ; உண்
டும், சுகித்தும், களித்தும், என்ன பலனைப்
பெற்றோம். இந்தக்கொலைத்தொழில் புரிந்து
குடும்பத்துடன் கூடி மகிழ்ந்த நமது தந்தை
தாய் பந்து பாட்டன் முதலிய பேர்களெங்
கே? யாவரும் மடிந்து தானே போனார்கள்.
இருந்தவர் ஒருவருமில்லையே? என்று மனதி
ளகி வாடி இந்த ஆண் புறுவைப்போல் நமக்
கு அதி தீவிரப்பக்குவங்கிட்டுமா ? ஏதேது
இன்னமென்ன தீவினைக்காளா யிருக்கின்றோ
மோ தெரியாதென்று கூட்டிலிருக்கின்ற பெ
ண்புறுவைக்கையில் எடுத்துக்கொண்டு, உன்
புருஷனுக்கு ஒப்பாகிய புண்ணியவான் மண்
ணுலகத்திற் கண்டது மில்லை. கேட்டது மில்
லை. அப்புருஷனை நினைக்குந்தோறும் என் மன
ம் கலங்குகின்றது அப்படிப்பட்ட உத்தமனு
க்கு நான் துரோகியாய் விட்டேன் ; ஆவி
யோ கரைகின்றது ; பரிதவித்தலைகின்றது; ஆ
கையால் அக்கணவனுடன் கூடிப்பிரியாமல்
வாழ்ந்த உன்னைத்தீயாற் சுட்டு என் பாழான
அங்கத்திற்கு இரையாக வொட்டேன். உனக்
கிஷ்டமான விடத்திற்குப்போய் விடென்று
விட்டு விட்டான். அந்த வேடன் கையினின்
றும் விடுபட்ட பெண் புறு வானது வானத்
தில் உயரப்பறந்து, வேடனைக்கிட்டி ஐயா! எ
ங்களை ஒரு பொருளாயினைத்து நாங்களிரு
க்கும் வீடுதேடிவந்து நலிந்து,மெலிந்து,நாவு

க்குருசிதேடிய நீர் அதிதியாய் விட்டீர், இல்லறத்தை இச்சித்த பேர்கள் பரதேசிகளுக்கும் அன்னம் படைத்துப் பிரார்த்தனை கேட்பினும் கொடுத்துப்பசியகற்றிப் பரிவுடனாதரிப்பவேண்டிய கடமையினால் வேதாகம விதியின் படிக்கு என்புருஷன் உம்முடைய பசிக்கு உணவாயினார். இப்போது நீரென்னை விடுத்து எங்கேயாகிலும் போய் இன்பத்தையடைந்து வாழுமென்றிசைத்தீர்; நான் என்னாயகனுக்குப் பாதியாளாகையால்உயிர் போய் உடலிருப்பதினாலும் பாதிபோய்ப் பாதியாளிருப்பதினாலும் பயனென்ன? என்னாயகன் அதிதியாகிய உமக்கு ஆத்மதிருப்தி பண்ணிவைத்தார் நானும் ஒத்து நடந்தால் மாத்திரம் அவருதவிய ஆகாரப்பலன் பயன்படும். நான் அவரிஷ்டம் போலக் கலந்து நடவாவிட்டால் எனக்குநல்லகதி கிடையாது. ஆதலால் பெருந்தகையாரே! நீர் பட்சிக்க வாசைப்பட்டுப் பிடித்த என்னை இச்சைதீரப் புசிக்கக்கடவீர். என்கணவனுடன் நானும் போய்ச் சேருகிறேனென்று உயர வெழும் பித்தலை கீழாக வீழ்ந்து தன்னாயகனிறந்த நெருப்பிலே தானும் பிராணனை விட்டது. உடனே அப்புறாக்களிரண்டும் திவ்விய தேகம் பெற்றுச் சுவர்க்கலோகம் சேர்ந்தன. இதுமுதலியவைபவங்களைக் கண்ட வேடனானவன் மதிமருண்டு, மண்மேற்புரண்டு ஐயையோ! இவ்வாறு செய்த உத்தமனாக

குரு துரோகியானேனோ? கொலைபாதகனானே
னோ? பதிதனானேனோ? என்று மூர்ச்சைபோ
யப் பின்தெளிந்து பிறவுயிர்களைத்தின்றிருக்கி
ற இந்தவுடல புனிதம் பெறுமா? நான் பாவி
யானபோதிலும நல்ல உயிர்களால ஈடேறிக
கப படடு அப்பிராணிகளையே உணவாகக்கொ
ணட என்னுடலானது கதிபெறும விருக்கப
போமா? இனிமேலிந்தத் தேகம் இருந்தெ
ன்ன? இறந்தென்ன? வீடுவாசல பெண்டு
பிள்ளைகள் யாருககுப்பார் உதவி என்று ஞான
ம பிறந்து இப்போதே உயிர் தப்புவது நல
மென்று களங்கரகிதமாகிய கபோத மிரண்
டையும் ஞானோபதேசகுருவாகக் கொண்டெழு
சகாடடுத தீயில் வீழ்ந்து உடலை மாய்த்தான்.

---

விசிட்டாபுரமென்னும பட்டணத்தில கௌசி
கன் எனனொரு வேதியன் வேதாப்பியாசஞ் செ
யது சனமாக கோபதேசத்லதயுடைய வேன்
டி வசிஷ்டா ஆச்சிரமத்திறகுச்சென்று நெடுநா
ள பாடங்கேட்டுவருகையில, ஒரு நாள வெய்யிலினா
ல மிகவும இளைத்து ஓர மரத்தடியில நிற்க, அந்த
விருக்ஷத்தின் மீதிருந்த ஒரு கொக்கானது எச்ச
மிடுதலும், அது இவா தலையில் படடவுடன
கோபம பிறந்து கண்களை விழித்து மேல்நோக்க
வே அந்தக்கொக்கானது வெந்து சாமபலாய வி
ட்டது. இந்த வேதியன் தன்னைத்தானே நன்கும
தித்துக்கொண்டு நமக்கு மேலாகிய தவசசிரேஷ

டாகூடவுலகிலுமில்லையென்று செருக்கடைந்து, அந்தணா அக்கிராரத்துட் புகுந்து ஒரு வீட்டினிடத்துப் போய்ப் பவதி பிக்ஷாந்தேஹியென்றிரக்க, அதைக்கேட்ட ஒருத்தி அச்சமயத்தில் தன் புருடனுக்குக் கால்களையலம்பித் வருடிக்கொண்டிருந்து தன் நாயகன் நித்திரை போன பிறகு இந்த வேதியனுக்கு அன்னமெடுத்து வந்தாள். அதைக்கண்ட பிராமணன் கோபங்கொண்டு நான் பிச்சைக்கு வந்து கேட்டு எத்தனை நாழிகையாய் விட்டது. இது வரையிலே உண்டில்லையென்று சொல்லாமல் என்னைக் காக்கவைத்தனையல்லவா? அதிதிக்கு உபசாரம் புரிவதைக் காட்டிலும் புருடனுக்குப் பத்தம் செலுத்துவது பெரிதாமென்று கண்களைப் புரட்டிப்பார்க்க, இந்த உத்தமி நகைத்துக் கொக்கென்று என்னைப் பார்க்கின்றனையோ பிராமணா! நீயறியாதவன் உனக்குத் தருமத்தின்வழி தெரியாது இன்னம் பக்குவப்படவேண்டியிருக்கிறது. என் நாயகனுடைய பணிவிடைகளில் நானிருக்கும்போது சர்வேச்சுரன் வந்தாலும் எனக்கு நிமித்தமில்லை. ஆகையால் நீ கோபங் கொள்ளுவது அழகல்லவென்று சொல்லவே பிராமணன் திடுக்கிட்டு நம்மிடம் நீ தெரிந்த கொக்கின் செய்தியை இவ்விடத்தில் இருந்து சொன்ன இந்தப்பாக்கிய சாலி விரதசீலையாயிருக்கின்றாளென்றுணர்ந்து தாம் வலம்வந்து பாதங்களில் வீழ்ந்து தன்னை மன்னிக்கும்படி வேண்டிக்கொண்டு சென்றான்”

---

# சம்பூர்ணம்.